ஆகவே இதுகுறித்து அவையை ஒற்றிவைத்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. ஆனால் அமைதிநிலை ஏற்பட்டு பள்ளியை விரைவில் திறப்ப தற்கான ஏற்பாட்டினைக் கல்வித்துறை அதிகாரிகளும், மாவட்ட ஆட்சித் தலைவரும் மேற்கொண்டிருக்கிறார்கள் என்று கூறி இந்த அவை அலுவல்களை ஒற்றிவைக்கவேண்டிய அவசியமில்லையென்று கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய இவ்வளவு பெரிய விளக்கத்திற்குப் பிறகு, இத்தீர்மானத்திற்கு அவசியம் இல்லை என்று கருதுகிறேன். ஆகவே, இதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

(3) கவன ஈர்ப்பு.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பூந்துறை, இறைமாந்துறை ஆகிய இடங்களில் கடல் அரிப்பு ஏற்பட்டது குறித்து

MR. SPEAKER : The hon. Member Thiru N. Dennis will now call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance.

THIRU N. DENNIS : Sir, I call the attention of the Hon. Minister for Public Works to a matter of urgent public importance namely. the sea erosion in many parts of Kanyakumari district, namely, Poonthurai, Eraimanthurai, Enayam, Midalam and others during June-July 1972.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, 1972 ஜூன்-ஜூலை திங்களில் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரையோரக் கிராமங்களில் சில, கடலரிப்பால் கடுமையாகப் பாதிக்கப்பட்டன என்றும் மேல மிடலாம், இணையம், எரமாந்துறை, பூந்துறை கிராமங்களில் 62 குடிசைகளும் கல்வீடு ஒன்றும் நீரில் அடித்துச்செல்லப்பட்டன என்றும் அரசுக்கு அறிக்கை கள் வந்துள்ளன. பொதுப்பணித்துறையினால் கட்டப்பட்டுள்ள பாதுகாப்புப் பணிகளுக்கும் சேதம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆனால் உயிர்ச்சேதம் எதும் இல்லை.

மணல் மூட்டைகளை அடுக்கிவைப்பதன் மூலம் இக்கிராமங்களில் கடல் அரிப்பைத் தடுப்பதற்காகத் தாற்காலிக நடவடிக்கைகளைப் பொதுப்பணித் துறையும் வருவாய்த்துறையும் எடுத்துள்ளன.

1972 ஆகஸ்ட் 21] [திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா]

கடல் அரிப்பைத் தடுப்பதற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள காப்பு வேலைகளின் விவரங்கள் கீழ்வருமாறு :—

(1) மிடலாம் துறை :—கரை நெடுக 3,300 அடி நீளத்திற்கு ரூ. 89,500 செலவில் இரண்டு வரிசை பனை மரக்கம்பங்கள் நடப்பட்டு அவற்றிற்கிடையே கரடு முரடான கற்கள் போடப்பட்டுள்ளன.

(2) எரமாந்துறை :—2 அடி இடைவெளிவிட்டுப் பனைமரங்கள் நடப்பட்டுள்ளன. சிமிட்டி கான்கிரீட் பாறைகள் இந்தப் பனை மரங்களுக்கிடையில் போடப்பட்டுள்ளன. இவ்வாறு மூன்று அடுக்கு நீர் அரிப்புத் தடுப்புச் சுவர்கள் அமைக்கப்பட்டுள்ளன. இப்பணி 1971-ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டது. இதற்கான மொத்தச் செலவு ரூ. 85,056.

(3) பள்ளம் துறை.—கடற்கரை நெடுக 450 மீட்டர் நீளத்திற்கு கல்கட்டுமானத் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளது. இதற்கான செலவு ரூ. 99,000. இச்சுவர் 1971-ல் கட்டப்பட்டது.

(4) மேல மணக்குடி.—பழையாறு முகத்துவாரத்திலிருந்து கடற்கரையின் மேற்கு அலைத்தடுப்புச் சுவர் மீது 335 அடி நீளத்திற்கும் கடற்கரையின் தெற்குப் பக்கம் நெடுக 100 அடி நீளத்திற்கும் 5 கன அடி பரிமானத்திற்குக் குறையாத 2,600 பெரிய கற்கள் போடப்பட்டுள்ளன. ரூ. 47,200 செலவில் நிறைவேற்றப்பட்ட இப்பணி 1971-ல் முடிக்கப்பட்டது.

தமிழ்நாட்டின் கடற்கரை முழுவதிலும் கடல் அரிப்பைத் தடுக்க தகுந்த முறைகளை வகுப்பதற்காகப் பொதுப்பணித்துறையில் பூண்டி பாசன ஆராய்ச்சி நிலையத்தில் சிறப்பு உட்கோட்டம் ஒன்றை அமைப்பதற்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஆய்வுப்பணியை மேற்கொள்ளும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதும் மாதிரி ஆய்வுகளை நடத்துவதும் இச்சிறப்புப் பிரிவின் பணிகளாகும். இந்த ஆய்வுப்பணியை விரைவுப்படுத்துவதற்காகத் தமிழ்நாடு கடற்கரை நெடுக விமான மூலம் ஆய்வு செய்ய வகை செய்யும் செயற்குறிப்பு ஒன்றும் அரசின் ஆலோசனையில் இருந்து வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கடல் அரிப்பைத் தடுப்பதற்கு நிலையான ஏற்பாடாக தமிழ்நாட்டில் அரபிக்கடற்கரை நெடுக கடற்சுவர் ஒன்றைக்கட்டுவது குறித்த செயற்குறிப்பிற்கு இறுதி வடிவம் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. என். டென்னிஸ்: சார், கன்னியாகுமரி மாவட்டத்தின் கடலோரத்தி லுள்ள சில கிராமங்களில் தடுப்புச் சுவர் கட்டப்பட்டுள்ளன. அது கடல் அரிப்பிற்கு நிரந்தர பரிகாரம் காணக்கூடியதாக இல்லை. மிடாலம் போன்ற இடங்களில் கட்டப்பட்டிருக்கும் தடுப்புச் சுவர்கள் கடல் அரிப்பிற்கு

இரையாகிவிட்டது. கேரளாவில் நீண்டகரை போன்ற இடங்களில் கடலரிப்பைத் தடுப்பதற்காக கடலுக்குள் கல்லை அடுக்கி கடல் அரிப்பை நிறுத்த முடியும் என்று பரிகாரம் கண்டிருக்கிறார்கள். அது போன்ற நடவடிக்கைகளால் தான் நிரந்தரபரிகாரம் காண முடியும் என்பதை ஏற்படுத்தியிருக்கிறார்கள். கடலால் சூழப்பட்டிருக்கும் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கிராமங்களை கடல் அரிப்பிலிருந்து நிரந்தரமாகத் தடுப்பதற்கு இத்தகைய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(4) அரசினர் சட்ட முன்வடிவுகள்

(அ) தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன் வடிவு (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/72) (கூட்டாய்வுக்குழு திருத்தி அமைத்தவாறு)

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1972-ம் ஆண்டு கடன் நிவாரண சட்ட முன்வடிவு * (சட்டப் பேரவை சட்ட முன் வடிவு எண் 21/72) கூட்டாய்வுக் குழு திருத்தியமைத்தவாறு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென்று நான் முன்மொழிகிறேன்.

விவசாயிகள் அல்லாத குறைந்த வருவாய்த் தொகுதியினர்க்குக் கடன் கொடுத்திருப்பவர்கள் வாங்கும் அநியாய வட்டியினால் அவர்களது கடன் சுமை நாளுக்கு நாள் பெருகிவருவதன் காரணமாக அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லைகளைக் களைவதற்கென இந்தச் சட்டவரைவு கொண்டு வரப்பட்டுள்ளது என்பதை இப்பேரவை அறியும்.

இச்சட்ட வரைவின் விதித்துறைகளை இணை ஆய்வுக்குழு விரிவாகப் பரிசீலனை செய்து அதில் சில மாறுதல்களைச் செய்துள்ளது. செய்யப்பட்டுள்ள முக்கிய மாறுதல்களில் கீழ்க்கண்டவற்றை நான் குறிப்பிடுகிறேன்:—

(1) கூட்டுறவுத் துறையிலும் வங்கியிலும் வசூலிக்கப்படுகிற தற்போதைய வட்டி வீதங்களைக் கருத்தில் கொண்டு, ஆண்டுக்கு வட்டி வீதம் 6¼ சதவீதத்திற்குப் பதிலாக 9 சதவீதம் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

(2) வருமானவரி விதிக்கப்பெறுபவர்களின் ஆண்டு வருவாய் ரூ. 7,200-க்கு மேற்பட்டால் அவர்களும், வேளாண்மை ஆண்டு வருமானம் ரூ. 7,200-க்கு மேற்பட்ட தொகை மீது வேளாண்மை வருமான வரி விதிப்

---

* 19—8—72-ம் தேதிய தமிழ் நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.